## *திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின்*

## *100ஆவது உலக தூதுரைப்பணி நாள் செய்தி – 2026*

## *(18 அக்டோபர் 2026)*

# கிறிஸ்துவில் ஒன்றாய், தூதுரைப்பணியில் ஒன்றிணைந்து

*அன்புடைய சகோதர சகோதரிகளே,*

*திருத்தந்தை பதினான்காம் பயஸ் அவர்களால் தொடங்கப்பெற்ற, திருஅவை மிகவும் விரும்புகிற உலக தூதரைப்பணி, நூற்றாண்டை அடையும் இந்த 2026ஆம் ஆண்டிற்கு, "**கிறிஸ்துவில் ஒன்றாய், தூதுரைப்பணியில் ஒன்றிணைந்து"** என்ற கருப்பொருளை நான் தேர்ந்தெடுத்துள்ளேன்.*

*யூபிலி ஆண்டிற்குப் பிறகு, தூய ஆவியின் வழிநடத்தலுடன், மகிழ்ச்சியும் ஆர்வமும் நிறைந்த மனநிலையோடு, முழு திருஅவையும் தன் தூதுரைப்பணிப் பயணத்தில் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று நான் ஊக்குவிக்க விரும்புகிறேன். இதற்கு, கிறிஸ்துவில் ஒன்றிணைந்த உள்ளங்கள், ஒப்புரவு அடைந்த சமூகங்கள், தாராளமனதுடனும் நம்பிக்கையுடனும் இணைந்து பணியாற்றும் மனப்பாங்கு ஆகியன அவசியம்.*

*'கிறிஸ்துவில் ஒன்றாய், தூதுரைப்பணியில் ஒன்றிணைந்திருக்கிறோம்' என்பதை சிந்திக்கும் இந்நேரத்தில், இறை அருளால் நாம் வழிநடத்தப்பட்டு ஊக்கமடைவோமாக. **'நம்முள் பற்றியெரியும் தூதுரைப்பணி அழைப்பின் தீயை புதுப்பித்துக்கொண்டு'** திருஅவையின் வரலாற்றில் காணப்படும் இந்த **'புதிய தூதுரைப்பணிக் காலத்தில்',** நற்செய்தி அறிவிப்புக்கான உறுதியான அர்ப்பணிப்புடன் ஒன்றிணைந்து முன்னேறுவோம். (தூதுரைப்பணியாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் திருவிழா நாளில் வழங்கிய உரை, 5 அக்டோபர் 2025).*

## *1. கிறிஸ்துவில் ஒன்றாய் – அவரில் ஒன்றிணைந்தும், நமது சகோதர சகோதரிகளுடன் ஒன்றிணைந்தும் வாழும் தூதுரைப்பணிச் சீடர்கள்*

*கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்திருப்பதின் மறைபொருளே தூதுரைப்பணியின் மையமாக உள்ளது. தமது பாடுகளுக்குமுன் இயேசு தந்தையிடம், **"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!"*** (யோவா 17:21) என்று *வேண்டினார்.*

*இந்த வார்த்தைகள், இயேசுவின் ஆழ்ந்த விருப்பத்தையும், அவரது சீடர்கள் குழுமமாக வாழும் திருஅவையின் அடையாளத்தையும் வெளிப்படுத்துகின்றன. அதாவது, தந்தை– மகன்– தூய ஆவி எனும் மூவொர் இறைவனின் வாழ்விலிருந்து தோன்றி, அதனால் தொடர்ந்து பேணப்பட்டு வரும் ஒன்றிணைவு. இந்த ஒன்றிணைவு, மனிதர்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்திற்கும், படைக்கப்பட்ட அனைத்துடனும் இணக்கத்துடன் வாழ்வதற்கும் துணை நிற்கிறது.*

*கிறிஸ்தவராக இருப்பது என்பது முதன்மையாக சில நடைமுறைகள் அல்லது கருத்துகளைப் பின்பற்றுவது அல்ல. மாறாக, அது கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்து வாழும் வாழ்க்கை. அந்த வாழ்வில், தூய ஆவியின் வழியாக தந்தையுடன் இயேசுவுக்குள்ள மகன் உறவினைப் பகிர்ந்துகொள்கிறோம். திராட்சைச் செடியின்*

*கிளைகள் கொடியில் இணைந்திருப்பதுபோல் (யோவா 15:4), கிறிஸ்துவில் நிலைத்திருப்பதையே இது குறிக்கிறது; இறை வாழ்வில் முழுமையாக மூழ்கியிருப்பதையே இது குறித்துக் காட்டுகிறது. இந்த ஒன்றிணைவு, நம்பிக்கை கொண்டவர்களிடையே பரஸ்பர ஒற்றுமையை உருவாக்குகிறது; மேலும் தூதுரைப்பணியில் விளையும் எல்லா கனிகளுக்கும் இதுவே மூலமாக உள்ளது. உண்மையில், புனித இரண்டாம் ஜான் பால் அவர்கள் கற்றுத்தந்ததுபோல், "**ஒன்றிணைவு என்பது தூதுரைப்பணியின் மூலமும் கனியும் ஆகும்.**"*

*இந்தச் சூழலில், திருஅவையின் முதன்மையான தூதுரைப்பணிப் பொறுப்பு என்னவெனில், தன் உறுப்பினர்களிடையே ஆன்மீக ஒறுமைப்பாட்டையும் சகோதர ஒற்றுமையையும் புதுப்பித்து நிலைநிறுத்துவதே. பல இடங்களில், நாம் மோதல்கள், பிளவுகள், தவறான புரிதல்கள் மற்றும் ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கை குறைவு ஆகியவற்றைக் காண்கிறோம். இவை நமது குழுமங்களுக்குள்ளேயே நிகழும்போது, அவை நமது சாட்சியத்தைப் பலவீனப்படுத்துகின்றன. கிறிஸ்து தமது சீடர்களிடம் ஒப்படைத்த நற்செய்தி அறிவிப்புப் பணி, முதன்மையாக, ஒப்புரவு அடைந்த உள்ளங்களையும், ஒன்றிணைவுக்காக ஆவலுடன் நிற்கும் மனங்களையும் நாடுகிறது. ஆகையால், அனைத்து கிறிஸ்தவ திருஅவைகளுடனும் ஒன்றிணைவுக்கான முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்துவது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. நீசேயா பொதுச்சங்கம் நடைபெற்றதின் **1700ஆவது ஆண்டு நினைவை** ஒன்றாகக் கொண்டாடுவதால் உருவான வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு, நாம் மேலும் முன்னேற அழைக்கப்படுகிறோம்.*

*கடைசியாக, "**கிறிஸ்துவில் ஒன்றாய்**" இருப்பது என்பது, நமது பார்வை எப்போதும் ஆண்டவர்மேல் பதிந்திருக்க வேண்டும் என்பதையே குறிக்கிறது. அப்போது மட்டுமே அவர் நமது வாழ்க்கையின் மையமாகவும், நமது குழுமங்களின் மையமாகவும் இருப்பார்; ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும், மனிதர்களுக்கிடையேயான உறவுகளிலும் அவர் மையமாக விளங்குவார். இதன்மூலம் நாம் வியப்புடன் இவ்வாறு சொல்ல வழிநடத்தப்படுகிறோம்: "**இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்**" (கலா 2:20). அவருடைய வார்த்தையை இடைவிடாது கேட்பதாலும், அருளடையாளங்கள் வழியாக கிடைக்கும் இறை அருளாலும், நாம் திருஅவையில் உயிருள்ள கற்களாக மாற முடியும். இன்று, இரண்டாம் வத்திக்கான் சங்கமும் அதன்பின் வந்த திருத்தந்தையர்களின் போதனைகளும் முன்வைத்த அடிப்படைக் கருத்துகளை மீண்டும் ஏற்று வாழ அழைக்கப்படுகிறது திருஅவை. இதில் குறிப்பாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் போதனைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.*

*உண்மையில், புனித பவுல் கூறுவதுபோல், "**நாங்கள் எங்களைப் பற்றி அல்ல, இயேசு கிறிஸ்துவைப் பற்றியே அறிவிக்கிறோம்**" (2 கொரி 4:5). இதன் காரணமாக, புனித ஆறாம் பவுல் அவர்களின் வார்த்தைகளை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்:*

***" நாசரேத்து இயேசு, இறை மகன் – அவருடைய பெயர், போதனை, வாழ்க்கை, வாக்குறுதிகள், இறையாட்சி மற்றும் மறைபொருள் ஆசியன அறிவிக்கப்படாவிட்டால், உண்மையான நற்செய்தி அறிவிப்பு இல்லை"*** (Evangelii Nuntiandi, 22). *இந்த உண்மையான நற்செய்தி அறிவிப்பு, ஒவ்வொரு கிறிஸ்தவரின் உள்ளத்திலிருந்தே தொடங்கி, மனிதகுலம் முழுவதையும் சென்றடைகிறது. ஆகவே, நாம் கிறிஸ்துவில் எவ்வளவு அதிகமாக ஒன்றிணைந்திருக்கிறோமோ, அவ்வளவுக்குச் சிறப்பாக அவர் நம்மிடம் ஒப்படைத்த தூதுரைப்பணியை ஒன்றிணைந்து நிறைவேற்ற முடியும்.*

***2. உலகம் கிறிஸ்து ஆண்டவரை நம்புவதற்காக - தூதுரைப்பணியில் ஒன்றிணைந்து***

*சீடர்களின் ஒன்றிணைவு அவர்களுக்கான இறுதி நோக்கமல்ல, அது தூதுரைப்பணிக்காகவே ஆகும். இயேசு இதைத் தெளிவாகச் சொல்கிறார்:* **“நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்”** *(யோவா 17:21). ஒப்புரவு அடைந்த, சகோதர அன்பு நிறைந்த, ஒன்றிணைந்த குழுமத்தின் சாட்சியத்தின் வழியாகவே, நற்செய்தி அறிவிப்பு முழுமையான வலிமையைப் பெறுகிறது.*

*இந்தக் கோணத்தில், அருளாளர் பவுலோ மன்னா அவர்களின் வாசகத்தை நினைவுகூர்வது பொருத்தமானது:* **“முழு உலகின் மனமாற்றத்திற்காக, அனைத்து திருஅவைகளும் ஒன்றாய்.”** *இந்த வாசகம், 1916ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற திருத்தந்தையின் தூதுரைப்பணி ஒன்றியத்தை உருவாக்கத் தூண்டிய உயரிய இலக்கைச் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது.*

*அதன்* ***110ஆவது ஆண்டு நினைவு*** *நாளில், குருக்கள், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவரிடமும் தூதுரைப்பணி மனநிலையை ஊக்குவித்து வளர்க்கும் அதன் பணிக்காக, என் நன்றியையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நற்செய்தி அறிவிப்பில் ஈடுபடும் எல்லா முயற்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதை இது மேம்படுத்துகிறது. உண்மையில், திருமுழுக்குப் பெற்ற எவரும் தூதுரைப்பணியிலிருந்து விலக்கு பெற்றவரோ, அதில் அக்கறையற்றவரோ அல்ல. மாறாக, ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பிற்கும் வாழ்க்கை நிலைக்கும் ஏற்ப, கிறிஸ்து தமது திருஅவைக்குக் கொடுத்த மாபெரும் பணியில் பங்கேற்கிறார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மீண்டும் மீண்டும் நினைவூட்டியதுபோல், நற்செய்தி அறிவிப்பு எப்போதும் இணக்கத்துடனும், குழும உணர்வுடனும், கூட்டொருங்கியக்கமாக செயல்படும் மனப்பாங்குடனும் நடைபெறும் செயல் ஆகும்.*

*அதனால், தூதுரைப்பணியில் ஒன்றிணைவு என்பது, ஒன்றிணைவு சார்ந்த ஆன்மீக வாழ்வையும், தூதுரைப்பணி ஒத்துழைப்பையும் பாதுகாத்து வளர்ப்பதையே குறிக்கிறது. இந்த மனநிலையை தினந்தோறும் வளர்த்துக்கொண்டால், இறை அருள் படிப்படியாக, நமது சகோதர சகோதரிகளை நாம் நம்பிக்கையின் கண்களால் காணக் கற்றுத் தரும். மேலும், ஒவ்வொருவரிலும் தூயஆவி ஊக்குவிக்கும் நன்மைகளை மகிழ்ச்சியுடன் உணரவும், வேறுபாடுகளை ஒரு புதையலாக ஏற்கவும், ஒருவருக்கொருவர் சுமைகளைச் சுமக்கவும், எப்போதும் இறைவனிடமிருந்து வரும் ஒன்றிணைவையே நாடவும் கற்றுக்கொள்வோம். ஏனெனில்,* **“ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கும் ஒன்றே. எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே; அவர் எல்லாருக்கும் மேலானவர்; எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர்; எல்லாருக்குள்ளும் இருப்பவர்”** *(எபே 4:5–6). அந்த ஒரே ஆண்டவர் வழியாக, ஒரே தூதுரைப்பணியில் நாம் அனைவரும் பங்கெடுக்கிறோம். இந்த ஆன்மீக மனநிலையே, தூதுரைப்பணிச் சீடத்துவத்தின் அன்றாட வெளிப்பாடு ஆகும். இது திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணியை உலகளாவிய பார்வையுடன் மீண்டும் காண உதவுகிறது; மேலும் ஒருங்கிணைப்பு இல்லாமையையும், ஒரே ஆண்டவரின் சீடர்களிடையே உருவாகும் பிரிவினைகளையும், எடுத்துக்காட்டாக* **“நான் பவுலுக்குரியவன்”, “நான் அப்பொல்லோவுக்குரியவன்”** *(1 கொரி 1:10–12) என்ற மனநிலைகளையும் கடந்து செல்ல உதவுகிறது.*

*தூதுரைப்பணியில் ஒன்றிணைவு என்பது எல்லோரும் ஒத்திசைவாக இருப்பதைக் குறிக்கவில்லை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை; மாறாக, ஒரே இலக்கிற்காக — அதாவது கிறிஸ்துவின் அன்பை வெளிப்படையாகக் காட்டவும், அனைவரையும் அவரைச் சந்திக்க அழைக்கவும் — வெவ்வேறு வரங்களும் திறன்களும் ஒன்றாகச் சேர்வதையே அது குறிக்கிறது. உள்ளூர்க் குழுமங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைத்து செயல்படும்போதும், பண்பாட்டு, ஆன்மீக மற்றும் வழிபாட்டு வேறுபாடுகள் ஒரே நம்பிக்கையில் முழுமையாகவும் இணக்கத்துடனும் வெளிப்படும்போதும், நற்செய்தி அறிவிப்பு நிறைவேறுகிறது. ஆகையால், திருஅவையில் உள்ள அனைத்து நிறுவனங்களும், திருஅவை சார்ந்த தூதுரைப்பணி ஒன்றிணைவு உணர்வை மேலும் வலுப்படுத்தவும், தூதுரைப்பணிக்காகவும் தூதுரைப்பணிக்குள்ளேயும் ஒருவருடன்*

*ஒருவர் இணைந்து செயல்பட புதியதும் நடைமுறைப்படுத்தக்கூடியதுமான வழிகளை உருவாக்கவும் நான் ஊக்குவிக்கிறேன்.*

*இந்தச் சூழலில், தூதுரைப்பணி ஒத்துழைப்புக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும்* ***திருத்தந்தையின் தூதுரைப்பணி கழகங்களுக்கு*** *என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெருவில் நான் பணியாற்றிய காலத்தில், அவர்களின் பணியை நன்றியுடன் அனுபவிக்க வாய்ப்புக் கிடைத்தது. இந்தக் கழகங்கள் —* ***நம்பிக்கை பரப்புக் கழகம், குழந்தைகள் தூதுரைப்பணிக் கழகம், திருத்தூதர் புனித பேதுரு கழகம் மற்றும் திருத்தந்தையின் தூதுரைப்பணி ஒன்றியம்*** *— எல்லா வயதினரான நம்பிக்கையாளர்களிடமும் தூதுரைப்பணி விழிப்புணர்வை தொடர்ந்து வளர்த்து வருகின்றன. மேலும், உலகம் முழுவதும் உள்ள குழுமங்களை இணைக்கும் செபமும் அன்பும் நிறைந்த வலையமைப்பை உருவாக்குகின்றன. இங்கு, ஒரு முக்கியமான உண்மையை நினைவுகூர வேண்டும்.* ***நம்பிக்கை பரப்புச் கழகத்தின் நிறுவனர் அருளாளர் பவுலின் மரி ஜாரிகோ,*** *இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு* ***உயிருள்ள செபமாலை செபத்தைத் தொடங்கினார்.*** *இன்றும் அது உலகம் முழுவதும் உள்ள பல நம்பிக்கையாளர்களை, ஆன்மீகமும் தூதுரைப்பணியும் சார்ந்த ஒவ்வொரு தேவைக்காகவும் செபிக்க ஒன்றிணைத்து வருகிறது.*

*மேலும், நம்பிக்கை பரப்புச் சங்கத்தின் பரிந்துரையைத் தொடர்ந்து,* ***1926ஆம் ஆண்டில் பதினோறாம் பயஸ் அவர்கள், உலக தூதுரைப்பணித் தினத்தை நிறுவினார்*** *என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும். அந்த நாளில் சேகரிக்கப்படும் ஆண்டு காணிக்கைகள், திருத்தந்தையின் சார்பாக, திருச்சபையின் தூதுரைப்பணித் தேவைகளுக்காக அந்தக் கழகத்தால் பகிர்ந்து வழங்கப்படுகின்றன.*

*ஆகவே, இந்த நான்கு கழகங்களும் — ஒன்றாகவும், ஒவ்வொன்றும் தத்தமது தனித்தன்மையுடனும் — முழு திருஅவைக்கும் இன்றும் மதிப்புமிக்க பங்காற்றி வருகின்றன. இவை ஒன்றிணைவுக்கும், திருஅவை சார்ந்த தூதுரைப்பணி ஒற்றுமைக்கும் உயிருள்ள அடையாளங்களாக விளங்குகின்றன. நன்றி நிறைந்த மனநிலையோடு, அனைவரும் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு நான் அழைக்கிறேன்.*

### *3. அன்பின் தூதுரைப்பணி – இறைவனின் நிலையான, பிரமாணிக்கமான அன்பை அறிவித்து, வாழ்ந்து, பகிர்வது*

*ஒன்றிணைவு தூதுரைப்பணிக்கான அடிப்படை என்றால்,* ***அன்பே அதன் உயிர்நாடி*** *ஆகும். நாம் உலகிற்கு அறிவிக்க அனுப்பப்பட்ட நற்செய்தி, ஒரு கருத்தியலோ கோட்பாடோ அல்ல, அது* ***இயேசு கிறிஸ்துவின் முகத்திலும் வாழ்க்கையிலும் மனித வடிவம் எடுத்த இறைவனின் நிலையான அன்பின் நற்செய்தி*** *ஆகும்.*

*சீடர்களின் தூதுரைப்பணியும், திருஅவையின் தூதுரைப்பணியும், தூய ஆவியில் கிறிஸ்துவின் தூதுரைப்பணியைத் தொடர்ந்து நடத்துவதே. இது அன்பிலிருந்து பிறந்து, அன்பில் வாழ்ந்து, அன்பை நோக்கி இட்டுச் செல்லும் தூதுரைப்பணி. உண்மையில், தமது பாடுகளுக்குமுன் தம் தந்தையிடம் இயேசு செய்த மகத்தான செபத்தில், தமது சீடர்களிடையே ஒன்றிணைவை வேண்டிய பின்பு, அவர்* ***“நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும் உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன்”*** *(யோவா 17:26) என்று நிறைவு செய்கிறார். கிறிஸ்துவின் அன்பால் தூண்டப்பெற்ற திருத்தூதர்கள், கிறிஸ்துவுக்காக நற்செய்தி அறிவிக்கப் புறப்பட்டுச் சென்றார்கள் (2 கொரி 5:14). அதேபோல், நூற்றாண்டுகள் கடந்தும், எண்ணற்ற கிறிஸ்தவர்கள் — சாட்சிகளாக உயிர் தந்தவர்கள், நம்பிக்கையில் உறுதியாய் நின்றவர்கள், தூதுரைப்பணியாளர்கள் — இந்த இறை அன்பை உலகிற்கு அறிமுகப்படுத்த தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்துள்ளனர். ஆகவே, அன்பின் ஆவியான தூய ஆவியின் வழிநடத்தலோடு, திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணி, உலக முடிவுவரை தொடரும்.*

இன்று **பிறவின மக்களிடையே** (ad gentes) **பணியாற்றும் தூதுரைப்பணியாளர்களுக்கு** என் சிறப்பு நன்றியை வெளிப்படுத்த விரும்புகிறேன். புனித பிரான்சிஸ் சவேரியாரைப்போல, அவர்கள் தங்கள் தாயகம், குடும்பம் மற்றும் பாதுகாப்பான வாழ்வைத் துறந்து, நற்செய்தியை அறிவிக்கவும், கிறிஸ்துவையும் அவரது அன்பையும் பிறவினத்தாரிடையே கொண்டு செல்லவும் புறப்பட்டுள்ளனர். பல நேரங்களில் சவால்கள் நிறைந்த, வறுமை சூழ்ந்த, மோதல்களால் பாதிக்கப்பட்ட அல்லது பண்பாட்டு வேறுபாடுகள் மிகுந்த பகுதிகளுக்கே அவர்கள் செல்கிறார்கள். இடுக்கண்களும் மனித வரம்புகளும் இருந்தபோதிலும், அவர்கள் மகிழ்ச்சியுடன் தங்களை இப்பணிக்கு அர்ப்பணித்து வருகின்றனர். ஏனெனில், **கிறிஸ்துவும் அவரது நற்செய்தியும் நாம் வழங்கக்கூடிய மிகப்பெரிய செல்வங்கள்** என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்களின் நிலைத்த முயற்சியின் வழியாக, இறைவனின் அன்பு, எல்லாத் தடைகளையும் கடந்து செல்கிறது என்பதை அவர்கள் காட்டுகின்றனர். இன்றும் உலகிற்கு கிறிஸ்துவின் இத்தகைய துணிச்சலான சாட்சிகள் தேவை. திருஅவை குழுமங்களுக்கும் புதிய தூதுரைப்பணி இறையழைத்தல்கள் தேவை. அவர்களை எப்போதும் நம் இதயத்திற்கு அருகில் வைத்துக்கொண்டு, இறைத்தந்தையிடம் அவர்களுக்காக இடைவிடாது செபிப்போம். நற்செய்தி அறிவிப்புப் பாதையில், உலகின் எல்லைகள்வரை கிறிஸ்துவைப் பின்பற்ற, எல்லாவற்றையும் விட்டு செல்லத் தயாராக இருக்கும் இளைஞர்களையும் பெரியவர்களையும் அவர் நமக்குத் தாராளமாக அருள்வாராக!

ஆண்-பெண் தூதுரைப்பணியாளர்களின் வாழ்வை வியந்து போற்றி, மனம் நிறைந்து பாராட்டுவதுடன், முழு திருஅவையையும் நான் ஒரு சிறப்பு வேண்டுகோளுடன் அழைக்கிறேன். கிறிஸ்துவில் வாழும் நமது வாழ்க்கைச் சாட்சியத்தின் வழியாகவும், செபத்தின் வழியாகவும், தூதுரைப்பணிக்கான நமது காணிக்கைகளின் வழியாகவும், நற்செய்தி அறிவிப்புப் பணியில் அவர்களுடன் ஒன்றிணைவோமாக! புனித பிரான்சிஸ் அசிசியார் கூறியதுபோல், **"அன்பு, அன்பு செய்யப்படவில்லை"** அவர் விண்ணகம் அடைந்ததன் எண்ணூறாம் ஆண்டு நினைவை நாம் கொண்டாடும் இந்நேரத்தில், அவரை நாம் சிறப்பாக நினைவுகூர்கிறோம். ஆண்டவரின் அன்பில் வாழவும், அருகிலும் தொலைவிலும் உள்ள அனைவரிடமும் அந்த அன்பை எடுத்துச் செல்லவும் அவர் கொண்டிருந்த ஆவலிலிருந்து நாம் ஊக்கம் பெறுவோம். ஏனெனில் அவர் கூறியதுபோல, **"நம்மை மிகுதியாக அன்பு செய்த அந்த அன்பு, மிகுதியாக அன்பு செய்யப்பட வேண்டும்"** *(புனித போனவெந்தூர் எழுதியுள்ள புனித பிரான்சிசின் வாழ்க்கை, அதிகாரம் 9, 1)* மேலும், **'என் இறப்பிற்குப் பிறகும் என் தூதுரைப்பணியைத் தொடருவேன்'** என்று அறிவித்த **குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின்** ஆர்வத்திலிருந்தும் நாம் ஊக்கம் பெறுவோம். அவர் கூறினார்: **"விண்ணகத்திலும், இவ்வுலகில் இப்போது நான் செய்வதுபோலவே செய்யவே விரும்புவேன்: இயேசுவை அன்பு செய்வதும், அவர் அன்பு செய்யப்படச் செய்வதும்"** *(அபே பெல்லியேருக்கு எழுதிய கடிதம் 220, 24 பிப்ரவரி 1897)*

இந்தச் சாட்சிகளால் ஊக்கமடைந்து, நம்மில் ஒவ்வொருவரும், தத்தமது அழைப்புக்கும், பெற்றுள்ள வரங்களுக்கும் ஏற்ப, **எப்போதும் அன்பின் செயல்பாடாக இருக்கும்** இந்த மாபெரும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்குப் பங்களிக்க உறுதி ஏற்போம். உங்கள் செபங்களும் நடைமுறை ஆதரவுகளும், குறிப்பாக **உலக தூதுரைப்பணி நாளில்,** இறைவனின் அன்பின் நற்செய்தியை அனைவரிடமும் — குறிப்பாக மிகவும் ஏழைகளிடமும், தேவையில் உழல்வோரிடமும் — கொண்டு செல்ல மிகப் பெரிய உதவியாக இருக்கும்.

எவ்வளவு சிறிய காணிக்கையாக இருந்தாலும், அது தூதுரைப்பணி ஒன்றிணைவின் அர்த்தமுள்ள செயலாக மாறுகிறது. **"உலகம் முழுவதும் உள்ள தூதுரைப்பணியாளர்களுக்கு நான் உதவுவதற்காக நீங்கள் செய்யும் அனைத்திற்கும்"** என்ற என் மனமார்ந்த நன்றியை மீண்டும் புதுப்பிக்கிறேன் *(உலக தூதுரைப்பணி நாள் 2025 – காணொளிச் செய்தி, 19 அக்டோபர் 2025).*

ஆன்மீக ஒன்றிணைவை வளர்க்கும் பொருட்டு, இந்த எளிய செபத்துடன் உங்களுக்குத் என் ஆசியை வழங்குகிறேன்:

## மன்றாட்டு

*தூய தந்தையே, கிறிஸ்துவில் எங்களை ஒன்றிணைத்தருளும்; ஒன்றிணைக்கும், புதுப்பிக்கும் அவரது அன்பில் எங்களை ஆழமாக வேரூன்றச் செய்யும்.*

*திருஅவையின் உறுப்பினர்கள் அனைவரும் தூதுரைப்பணியில் ஒன்றிணைந்திருக்க, தூய ஆவியின் வழிநடத்தலுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக, நற்செய்திக்கு சாட்சியமளிப்பதில் துணிவுடன் இருந்து, உமது நிலையான அன்பை சொல்லாலும் அன்றாட வாழ்வாலும் அறிவிக்க அருள்புரியும். அனைத்து ஆண்-பெண் தூதுரைப்பணியாளர்களையும் ஆசீர்வதியும்; அவர்களின் முயற்சிகளில் அவர்களைத் தாங்கி, நம்பிக்கையுடன் அவர்களைப் பாதுகாத்தருளும்.*

*அன்னை மரியே, தூதுரைப்பணிகளின் அரசியே, இவ்வுலகின் ஒவ்வொரு மூலையிலும் நற்செய்தி அறிவிப்புப் பணியில் எங்களுடன் நடந்து, எங்களை அமைதியின் கருவிகளாக மாற்றி, கிறிஸ்துவில் மீட்பின் ஒளியை உலகம் முழுவதும் அறிய அருள்புரியும். ஆமென்.*

*வத்திக்கானிலிருந்து, 25 ஜனவரி 2026, பொதுக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு, புனித பவுலின் மனமாற்ற விழா*

**திருத்தந்தை பதினான்காம் லியோ**